

திராவிட மாடல் அரசின் சேவைகளை கடைக்கோடி மக்களுக்கும் கொண்டு சேர்த்திட முதலமைச்சர் மு.க.ஸ்டாலினின் அவர்கள் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம், திருச்சி கிழக்குத் தொகுதி மாநகராட்சிக்கு உட்பட்ட மண்டலம்2 வார்டு எண் 34 உட்டப்பட்ட பகுதியில் வசிக்கும் மக்களுக்கு 'உங்களுடன் ஸ்டாலின்' முகம் நடைபெற்றது. அதனை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்து உடனே தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கான ஆணைகளைப் பயனாளிகளிடம் வழங்கினார். இந்தநிகழ்வில் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், மாநகர செயலாளர் மண்டல குழு தலைவர் மு.மதிவாணன், பகுதி கழகச் செயலாளர் டி.பி.எஸ்.எஸ். ராஜ்முகமது, வட்டக் கழகச் செயலாளர்கள் சில்வியா, கருணாநிதி அரியமங்கலம் கோட்டம் உதவி ஆணையர் திருமதி. ஜெயந்தி, தாசில்தார் விக்னேஷ், உதவி செயற்பொறியாளர் இப்ராஹிம், இலைநிலை பொறியாளர் ரவிக்குமார், சுகாதார ஆய்வாளர் பாலகிருஷ்ணன்,கௌசல்யா ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஆண்டிமடம் தெற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட கொளத்தூர், புதுக்குடி ஊராட்சியைச் சேர்ந்த மாற்றுக்கட்சி தோழர்கள் மற்றும் ஆண்டிமடம் மேற்கு ஒன்றிய கழகத்திற்கு உட்பட்ட அழகாபுரம், சிலம்பூர், கொடுக்கூர் ஊராட்சிகளை சேர்ந்த மாற்று கட்சித் தோழர்கள் என 100க்கும் மேற்பட்டோர் கழகத்தில் அமைச்சர் சா.சி.சிவசங்கர் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். உடன் கழக சட்டதிட்ட திருத்த குழு இணைச் செயலாளர் சுபா. சந்திரசேகர், தலைமைக் கழக பேச்சாளர் சிவாஜி கிருஷ்ணமூர்த்தி, ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய கழகப் பொறுப்பாளர் ஆர்.கலியபெருமாள், ஆண்டிமடம் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் இரா.செந்தில்குமார் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# 'தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன்' ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்புக் கூட்டம்!

### அந்தியூர் ப.செல்வராஜ் – கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. – அமைச்சர் – மருத்துவர் மா.மதிவேந்தன் பங்கேற்பு!

நாமக்கல், செப்.24-

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 'தமிழ்நாட்டை தலைகுனிய விட மாட்டேன்' 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்புக் கூட்டம் நாமக்கல் பூங்கா சாலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். நாமக்கல் தெற்கு நகர செயலாளர் ராணா ஆனந்த் வரவேற்புரை ஆற்றினார்,

நாமக்கல் மாநகராட்சி மேயர் கலாநிதி துணை மேயர் பூபதி மேற்கு நகர செயலாளர் சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சட்டமன்ற உறுப்பினர் நாமக்கல் பெ.ராமலிங்கம் சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட துணை செயலாளருமான பொன்னுசாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப. செல்வராஜ், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரும் ஆதி திராவிடர் நலக்குழு துணைத் தலைவருமான மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான உறுதி மொழியை வாசித்தனர். அதனைத் தொடர்ந்து கழக தோழர்களும் பொதுமக்களும் உறுதிமொழி ஏற்றனர்.

கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப. செல்வராஜ் சிறப்புரையாற்றுகையில், ஒன்றிய அரசு நமது உரிமையை பறிக்கும் வகையில் செயல்படுத்தும் வகையில் செயல்பட்டு வருகிறது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து கழகத் தலைவர் முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் இந்தியாவிலேயே முதல் குரல் எழுப்பி உள்ளார். தமிழகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி வரும் திட்டங்களை பல்வேறு வடமாநிலங்களும் செயல்படுத்தி வருகின்றனர். அந்த வகையில் இந்தியாவிலேயே உள்ள முதலமைச்சர்களில் முதன்மையாக திகழ்ந்து வருகிறார். தமிழ்நாட்டில் மக்களுக்காக புதிய புதிய திட்டங்களை வழங்கி வருகிறார். வரும் 2026 தேர்தலில் இலக்கை மிஞ்சி தமிழ்நாட்டில் மிகப்பெரிய வெற்றி பெற்று சாதனை படைப்போம். அதற்காக கழக நிர்வாகிகள் கழகத் தொண்டர்கள் அனைவரும் இணைந்து பணியாற்றிட வேண்டும் என்று கூறினார்.

**எடப்பாடி பழனிச்சாமிக்கு இராஜேஸ்குமார் எம்.பி சவால்**

நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ராஜேஸ்குமார் எம்.பி பேசியதாவது: ஓரணியில் தமிழ்நாடு மாபெரும் பிரச்சார இயக்கத்தை முதல்வர் கடந்த ஜூலை மாதம் துவங்கினார். இதற்கு தமிழகம் முழுவதும் வரவேற்பு ஏற்பட்டது. ஒன்றிய அரசு நமது உரிமையை பறிக்கும் வகையில் செயல்படுவதை திமுகவினர் வீடு, வீடாக சென்று மக்களை சந்தித்து எடுத்து கூறினார்கள். தமிழ்நாட்டில் உள்ள வாக்காளர்களில் சுமார் 50 சதவீதம் பேர் திமுகவில் உறுப்பினராக இணைத்து கொண்டனர். நாமக்கல் கிழக்கு மாவட்டத்தில், உள்ள 3 தொகுதியில் 60 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் திமுகவில் உறுப்பினராக இணைத்து கொண்டனர்.

எந்த அரசியல் கட்சியும் செய்யாத சாதனையை நாம் செய்துள்ளோம். முதல்வரின் மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையின் காரணமாக திமுகவில் மக்கள் ஆர்வமுடன் இணைத்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டில் 45ஆயிரம் பேருக்கு இலவச வீட்டுமனை பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

ராசிபுரம் கூட்டுகுடிநீர் திட்டப்பணிகள் 40 சதவீதம் அதிமுக ஆட்சி காலத்திலேயே முடிந்துவிட்டதாக ராசிபுரத்தில் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பச்சைபொய் பேசியுள்ளார். எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர்கள் தங்கமணி, சரோஜா ஆகியோருக்கு சவால் விடுகிறேன். திமுக ஆட்சிக்கு வந்த பிறகு தான், ராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டத்திற்கு அரசாணை வெளியிடப்பட்டது. அதன் பின்னர் தான் டெண்டர் விடப்பட்டது. பின்னர் அடிக்கல் நாட்டப்பட்டு தற்போது பணிகள் நடைபெற்று வருகிறது.

அதிமுக ஆட்சியில் தான் ராசிபுரம் கூட்டு குடிநீர் திட்டத்தை கொண்டு வந்தோம் என எடப்பாடிபழனிசாமி நிருபித்தால், நான் எம்பி பதவியை ராஜினாமா செய்வேன். எடப்பாடி பழனிசாமி சரியான அரசியல் வாதியாக இருந்தால் எதிர்க்கட்சி தலைவர் பதவியை ராஜினாமா செய்ய தயாரா?.

போதமலைக்கு சாலை அமைக்கவும் திமுக ஆட்சி காலத்தில் தான் உச்சநீதிமன்றம் வரை சென்று உத்தரவு பெற்றோம். ஆனால் சரோஜா எம்பியாக இருந்த போது உத்தரவு பெற்றதாக எடப்பாடி பழனிசாமி சொல்கிறார். இது தொடர்பான அனைத்து ஆவணங்களும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ளது. வந்து பாருங்கள். அனைத்தையும் மக்கள் மன்றத்தில் எடுத்துவைக்கலாம். வாக்கு கேட்க ஏன் மக்களை ஏமாற்ற வேண்டும்.இவ்வாறு கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்பி தெரிவித்தார்.

கூட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் பேசியதாவது:

கடந்த அதிமுக ஆட்சி காலத்தில் பல்வேறு கொடுமைகள் நடந்தது. ஜெயலலிதா இறந்த பிறகு அதிமுக ஆட்சி மோசமாக இருந்தது. மக்கள் தீர்க்கமாக யோசித்து 2021ல் தி.மு.க.வுக்கு மக்கள் வாக்களித்து மு.க ஸ்டாலினை முதல்வராக தேர்வு செய்தீர்கள். அதிமுக நீடித்தால் தமிழகத்தின் உரிமை பறிபோகும் என்பது தெரிந்தால் தான் மக்கள் திமுகவுக்கு வாக்களித்தனர். இதே போல 2026ம் ஆண்டும் மீண்டும் திமுக ஆட்சி அமைக்கும். இதை எந்த கொம்பனாலும் தடுக்க முடியாது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

கூட்டத்தில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி, தலைமை கழகப் பேச்சாளர் ராஜகோபால், மாவட்ட நிர்வாகிகள் மணிமாறன், நலங்கிள்ளி, ஏ.கே. பாலச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர் கே பி ராமசுவாமி, கே பி ஜெகநாதன், ஆர் எம் துரைசாமி, அசோக் குமார், பாலசுப்பிரமணியம், நவலடி, பழனிவேல், கௌதம், செந்தில்முருகன், ஜெயபிரகாஷ்,

நகர செயலாளர் என் ஆர் சங்கர், பேரூர் கழக செயலாளர் செல்லவேல் செல்லப்பன், தனபால், செல்வராஜ், அன்பழகன், முருகேசன், கண்ணன், ஜெயக்குமார், ஆர் எஸ் எஸ் ராஜேஷ், பொன் நல்ல தம்பி, சுப்பிரமணியம் பழனியாண்டி,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் டாக்டர் மாயவன், செல்வம், கண்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் சுசிதரன், சரவணகுமார், கண்ணன், பூவராகவன், குணசேகரன், விமலா சிவகுமார், காளியப்பன் மற்றும் மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர் இறுதியாக வார்டு கழக செயலாளர் பாஸ்கர் நன்றி கூறினார்.



நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்' ஓரணியில் தமிழ்நாடு தீர்மான உறுதிமொழி ஏற்பு பொதுக்கூட்டம் நாமக்கல் சாலையில் நாமக்கல் கிழக்கு மாவட்ட கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான அந்தியூர் ப. செல்வராஜ் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரும், ஆதிதிராவிடர் நலக்குழு துணைத் தலைவருமான மருத்துவர் மா.மதிவேந்தன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான உறுதி மொழி வாசிக்க அதனை கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். இக்கூட்டத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ.ராமலிங்கம், சேந்தமங்கலம் கே.பொன்னுசாமி, மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் செ. பூபதி நகர செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவகுமார் மற்றும் மாநில, மாவட்ட, கழக நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் கழக செய லாளர்கள், கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி இளைஞர் அணி சமூக அறக்கட்டளையின் சார்பில் மருத்துவ சிகிச்சைக்காக, 25 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை திருப்பூர் வடக்கு மாநகரம், 10 வதுவட்டக் கழக பிரதிநிதி சேகரிடம் திருப்பூர் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், திருப்பூர் வடக்கு மாநகர கழகப் பொறுப்பாளர் ஈ.தங்கராஜ் ஆகியோர் வழங்கினர். உடன் கழக மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் செ.உமா மகேஸ்வரி, மாவட்ட அவைத் தலைவர் க.நடராசன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் எஸ்.சரவணன் நம்பி, பா.குணராஜ், பொதுக்குழு உறுப்பினர் சண்முகசுந்தரம், வட்ட கழக செயலாளர் சசிகுமார் உள்ளனர்.



கோவை ஆர்.எஸ்.புரம் கலையரங்கத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் நேரடி நியமனம் மூலம் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள பணி ஆய்வாளர்களுக்கு (WORK INSPECTOR) நடைபெற்ற பயிற்சி வகுப்பின் நிறைவு விழாவில் சான்றிதழ்களை கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் வழங்கினார். இதில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், மாநகராட்சி ஆணையாளர் சிவகுரு பிரபாகரன், துணை ஆணையாளர்கள் குமரேசன், சுல்தானா, தலைமை பொறியாளர் விஜயகுமார், மேற்கு மண்டல தலைவர் தெய்வானை தமிழ்மறை, மாமன்ற உறுப்பினர் கார்த்திக் செல்வராஜ், துணை தலைமை பொறியாளர் இளங்கோவன், அண்ணா பல்கலைக்கழக மண்டல முதன்மையர் சரவணகுமார், உதவி நகர் நல அலுவலர் பூபதி, மண்டல உதவி ஆணையர்கள் துரைமுருகன், முத்துசாமி, செந்தில்குமரன் உள்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக மாணவர் அணியினரின் அறிமுக மற்றும் ஆலோசனைக் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நகர செயலாளர் வாரை எஸ்.பிரகாஷ், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பகலவன், துணை அமைப்பாளர்கள் நெல்சன் மண்டேலா, யோகபாலன், மதி முத்துக்குமார், நூருல் அமீன், சகுந்தலா தேவி, மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் புலவர் எண்கண் மணி, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர்கள் அரவிந்த், வினோத் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டின் மண் மொழிமானம் காக்க தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன் என்ற தீர்மான ஏற்புக் பொதுக்கூட்டம் மயிலாடுதுறை சின்னக் கடைத் தெருவில் நடைபெற்றது. கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., கழக இளம் பேச்சாளர் அ.தீன்ஷாநூப், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், தொகுதி பார்வையாளர்களான மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் மன்னை த.சோழராஜன், தலைமைக் கழக வழக்கறிஞர் மு.தினேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து.மகேந்திரன், இரா.இளங்கோவன் மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி.சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, மகா.அலெக்சாண்டர், மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் உள்ளனர்.



கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி, பீளமேடு மணிமகால் திருமண மண்டபத்தில், கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலம், வார்டு எண் 52,53க்கான "உங்களுடன் ஸ்டாலின்" முகாமை கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், கிழக்கு மண்டல உதவி ஆணையர் முத்துசாமி, கோவை தெற்கு வட்டாட்சியர் முஹம்மது ஷைகப்ப் முன்னிலையில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் பார்வையிட்டு பயனாளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கினார். இதில் பொதுக்குழு உறுப்பினர்கள் இரா.மணிகண்டன், நோயல் செல்வம், அண்ணா நகர் பகுதி பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், சுகாதார ஆய்வாளர் ஜீவன் முருகதாஸ், வட்டக் கழகச் செயலாளர்கள் கி.நாராயணன், மா.சிவக்குமரன், மாமன்ற உறுப்பினர் மோகன், கிரீன்வே. சுப்பிரமணி, மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் சு.தனபால், சுந்தர்ராஜ், ஒகுடை ஆறுமுகம், ஹட்கோ மாணிக்கம், ஆட்டோவாசு, க.சின்னச்சாமி, ராமதாஸ், மில் தண்டபாணி, ஆட்டோ சசி, ஜான், ராஜேந்திரன், மகேந்திர மணி, ஜி.வி.செல்வராஜ், பக்தவத்சலம், கோபாலகிருஷ்ணன், துரைசாமி, குமாரவேல் சந்திரசேகர், பட்டேல், ரங்கனாதன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.